www.tamilarangam.net

# ஈழ முரசு

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்

முரசு - 5 | பங்குனி 1987 | ஒலி - 5



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முரசின் பார்வையில்

## விடுதலை என்பது விளையாட்டு அல்ல

நாளை இப்படி விடியாது மக்களே. மீண்டும் விரைவில் 'கேற்' றடியில் ஜீப் வண்டி உறுமும். சப்பாத்தொலிகள் தடதடக்கும். எம்வீட்டுக் கதவுகள் அதிர்ந்து திறந்து கொள்ளும். பரீட்சைக்குப் படிக்கும் இளைஞனோ யுவதியோ அவர்களில்லாத பட்சத்தில் அப்பாவி அம்மாக்களோ, அப்பாக்களோ மீண்டும் அவர்களால் வதை முகாம்களுக்கு இழுத்துச் செல்லப்படப் போகிறார்கள். எங்கேயென்று கேட்கிறீர்களா? விடுதலை செய்யப்பட்டதென்று வீரவசனம் பேசப்பட்ட யாழ்ப்பாணத்தில்தான் மக்களே.

ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் கிளம்பிய தீப்பொறிகள் மன்னாரையும், மட்டக்களப்பையும், வன்னியையும், திருமலையையும் மலையகத்தையும் சுட்டுப் பொசுக்க, விடியலைப் பிரசவிக்கும் என்ற யாழ்ப்பாணம் தனது பாரம்பரியக் குணாம்சத்தை மாற்றிக் கொள்ளாமல் தன்னை மட்டும் காப்பாற்றிக் கொள்ள வழிதேடியதன் விளைவு இன்று எங்கள் தேசமெங்கும் எதிரொலிக்கிறது.

இன்று துன்பங்களின் எல்லை என்பது எமது தேசத்தின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் சொந்தமாகிவிட்டது. ஒரு தேசத்தின் விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசமக்களின் உரிமைப் போராட்டத்தை, தவறான சக்திகளும், நடுத்தர வர்க்கக் குணாம்சமும் எவ்விதம்

www.tamilarangam.net

சீரழிந்து விடமுடியும் என்பது இன்றைய எமது போராட்டநிலை உதாரணமாகும்.

விடுதலைக்கான தீர்க்கமான பாதைகளையும், வகுக்கப்பட்ட திட்டங்களையும் நிராகரித்து வெறுமனே வேட்டுச் சத்தங்களுக்கு கைதட்டி வீரவித்தைகளில் மயங்கிய மக்களே இப்போது புரிந்து கொள்ளுங்கள் விடுதலை என்பது வெறும் விளையாட்டல்ல என்பதை.

இன்றைய எமது துன்பங்களுக்கும் ஈழப்போராட்டத்தில் ஏற்பட்டிருக்கும் தேக்கத்திற்கும் காரணம் பிற்போக்குத்தனமான சக்திகளால் தவறன பாதையில் ஈழப்போராட்டம் திசை திருப்பப்பட்டதும் எமது பலவீனங்களும்தான் காரணம் என்பதைப் புரிந்துகொள்வோம். இத்தனை இழப்புக்களும், பட்ட துயரங்களும் இத்தகைய எமது பலவீனங்களால் வீணாகி விடப் போவதை நாம் அனுமதிக்கப்போகிறோமா........? அல்லது அநுபவங்களைப் பாடமாக்கி சரியான திசை வழியில் போராட்டத்தை முன்னெடுக்கப் போகிறோமா?

இனிமேலாவது எம்மைச் சுற்றியிருக்கும் மாயைகளை விலக்குவோம். சுயநலம் பேணும் குணாம்சத்தைக் களைவோம். பொது எதிரியை முறியடிக்க அனைத்துக் கரங்களையும் இணைப்போம். புதிய போர்த்தந்திரங்களைப் பாவித்து புரட்சிகரப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

www.tamilarangam.net



# கரங்களைப் பிணைப்போம், பொது எதிரியை முறியடிப்போம்.

*** பதுளையிலே பஸ்சில் குண்டு வெடிப்பு. பயணம் செய்த அப்பாவிச் சிங்கள மக்கள் சிலர் பலி. பலர் படு காயம்.

*** அப்பாறைப் பகுதியில் இருதடவைகள் ஆயுதம் ஏந்திய இளைஞர் குழுவின் வெறித்தனங்களிற்கு குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உட்பட 40க்கு மேற்பட்டஅப்பாவிச் சிங்கள மக்கள் பலி.

சில காலத்திற்கு முன் அநுராதபுரச் சம்பவத்தினால் தலை குனிந்த ஈழ மக்களை தலை நிமிராமலேயிருக்கச் செய்யும் வண்ணம் நடக்கும் மிலேச்சத்தனமான செயல்களே இவை. அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் மீது சிறீலங்கா கூலிப்படைகள் நடத்திவரும் கோரத்தனமான தாக்குதல்களிற்கும் அப்பாவிச் சிங்கள மக்கள் மீது நடக்கும் இத்தகைய தாக்குதலிற்கும்எந்த வேறுபாடுமேயில்லை.

தேச விடுதலையின் மீது ஆர்வமும் மனிதகுலத்தின் மீது விருப்பமும் கொண்ட ஈழ மக்கள் யாவரும் இதுபோன்ற சம்பவங்களை வெறும் செய்திகளாகப் பரிமாறிக் கொள்வதுடன் விட்டு விடாது இதற்கான பின்னணிகளை ஆய்வு செய்ய வேண்டுமென ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகிறது.

உண்மையிலே ஈழவிடுதலை என்பது தனித்து இலங்கைத் தீவின் ஒரு பகுதியிலே வாழும் மக்களை மாத்திரம் சார்ந்ததல்ல.

www.tamilarangam.net



அது தீவின் இரு சமூக மக்களிலும் தங்கியுள்ளது. இந்த இரு சமூகங்களையும் பிரித்து வைப்பதன் மூலமே தான் பதவியில் நீடிக்க முடியும் என்பது ஜெயவர்த்தனவுக்குத் தெரியும். ஜெயவர்த்தனவுக்கு மாத்திரமல்ல கடந்த காலங்களில் எம்மைஆண்ட பிரித்தானிய ஏகாதிபத்தியம் அனைத்திற்கும் தெரியும். அதனாலேயே இனவாதம் சந்ததி சந்ததியாக சிங்களப் பிரதேசங்களில் ஊட்டப்பட்டது. பௌத்த கோவில்கள் தொடங்கி பள்ளிக் கூடங்கள் ..... பல்கலைக் கழகங்கள் வரை சிங்கள மக்களுக்கு பேரினவாத போதை ஊட்டப்பட்டது. திட்டமிட்டு ஊட்டப்பட்ட இந்த இனவாதம் இரு சமூகங்களிடையேயும்இந்த பாரிய இடைவெளியை ஏற்படுத்தி வந்தது. இந்த இடைவெளியைப் பாவித்து தமிழ், சிங்கள முதலாளித்துவ அரசியல்வாதிகள் தமது பாரளுமன்ற சுகபோக வாழ்க்கையை வளர்த்து–வந்தனர். சிறீலங்காவில் ' தமிழனைக் கொல் ' என்ற கோசத்துக்கு கொஞ்சமும் குறைவில்லாமல் யாழ்ப்பாணத்தில் 'சிங்களவன் தோலில் செருப்புத் தைப்போம்' என்றகோசமும் இருந்தது. இவை நேற்றைய சம்பவங்கள்.

ஆனல், இருதரப்பினராலும் ஏன் இனவாதம் ஊட்டப்பட்டது. அதன் காரணமாக இரு சமூகமும் எப்படிப் பிளவுபட்டது அதனால் ஏற்பட்ட விளைவு என்ன என்பதைப் பற்றி எதையுமேசிந்திக்காத தமிழ் தரகு முதலாளித்துவத்தின் வழித் தோன்றல்–கள் தமது தலைவர்களுக்கு எந்த விதத்திலும் இனவாதத்தைக் கக்குவதில் தாம் குறைந்தவர்களில்லை என்பதைக் காட்டுவ–தற்காக நடத்தும் ஆயுதப் பாசிசமே இன்று நடக்கும் சிங்கள மக்கள் மீதான இந்தப் படுகொலைகள். இதனால் ஏற்க

www.tamilarangam.net



னவே கூறுபோடப்பட்டிருக்கும் இரு சமூகங்களும் மேலும்பிளவு பட்டுக் கொண்டே செல்வதற்கான வழிவகைகளையே ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் படுகொலைகள் உணர்ச்சிவசப்பட்டு நிகழ்த்தப்படுபவையோ அல்லது அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்களே நாமும்சிங்கள மக்களைக் கொல்வோம் என்ற பழிவாங்கும் உணர்வுடன் நிகழ்த்தப்படுபவையே அல்ல. முதலாளித்துவ சக்திகளின் பக்கபலத்துடன் வெகு திறமையாகத் திட்டமிடப்பட்டவை. இரு சமூகங்களும் மேலும்மேலும் பிளவு படவேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டுள்ள இந்த பிற்போக்குச் சக்திகள் ஈழத்திலோ அன்றி ஸ்ரீலங்காவிலோ புரட்சிக்கான எந்தச் சூழ்நிலைகளும் ஏற்படாமல் தடை செய்வதற்கான முக்கிய கருவியாக இந்த இனங்களுக்கிடையிலான பிளவைப் பயன்படுத்துகின்றன. மனிதாபிமானமும், மனித நேயமும், நாகரீகமும் மிக்க தமிழ் பேசும்மக்களின் மனங்களில் கூட இந்தப் படுகொலைகள் நியாயமானவை என்ற எண்ணம் தோன்றுவதற்கு பல்வேறுபட்ட பொய்ப்பிரசாரங்களையும் மேற்கொள்கின்றன.

ஆனால், ஈழபோராட்டத்தின் மீது நேசமும், போராட்டம் சரியான திசை வழியிலே செல்லவேண்டும் என்பதில் ஆர்வமும் கொண்ட முற்போக்குச் சக்திகள் இந்த மோசமான பாசிஸ்டுகளின் செயல்களைக் கண்டும் காணாத நிலையில் இருந்துவிடக் கூடாது. இவற்றினால் போராட்டத்தில் ஏற்படும் பாதகநிலையை பகிரங்கப்படுத்த வேண்டும். இவற்றினால் லாபமடைபவர்கள் யார் என்பதை முகத்திரையைக் கிழித்துக்காட்டவேண்டும்

அனைத்திற்கும் மேலாக நாம் இன்னுமொரு விடயத்தை ஆய்வு செய்ய வேண்டும். சிறீலங்காவின் பல பகுதிகளிலும் இன்று நாளைய புரட்சிக்கான பொறிகள் பறக்கத் தொடங்கிவிட்டன. அங்கே ஒரு புதிய எழுச்சிமிக்க இளைஞர் சமுதாயம் வேறு-பட்ட ஒரு திசையில் தமது சிந்தனைகளைத் திருப்ப ஆரம்பித்துவிட்டது. இதை அடக்குவதற்காக ஜெயவர்த்தன அரசின் இரும்புக்கரங்கள் ஈழத்தை ஒத்தது போல் மிக மோசமாகவே சிறீலங்காவிலும் பாய்கிறது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பல நூறு சிங்கள இளைஞர்களும், யுவதிகளும், கைது செய்யப்பட்டு விசாரணைகள் எதுவுமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் தமிழ் இளைஞர்கள்போல 'காணாமல்' போய்க் கொண்டிருக்கிறார்கள். அனைத்துச்சிங்கள மக்களும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் சுதந்திரம்மறுக்கப்படுகிறார்கள். விவசாயிகள் போராட்டம், கிராமியத் – தொழிலாளர் போராட்டம், மாணவர் போராட்டம் எனப் பலதரப்பு மக்களும் போராட்டங்களை நடத்திவருகின்றனர். தமிழ் மக்களைக் கொல்வதற்காகவும் தனது இராணுவத்தை பலப்படுத்தவும் ஜெயவர்த்தன மேற்கொள்ளும் பாரிய செலவீடுகள் சிங்கள மக்களை தொடர்ந்துபொருளாதாரப் புதைகுழிக்குள் தள்ளுகிறது. வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்படும் சிங்கள மக்களின் எண்ணிக்கை அன்றாடம் அதிகரித்துக் கொண்டு போகிறது.

இதற்கெல்லாம் காரணம் தமிழ் மக்களின் போராட்டமே என்று சிங்கள இளைஞர்கள் இப்போது நினைப்பதில் லைமோசமான முதலாளித்துவ பிரசாரச் சாதனங்கள் பிரச்சாரம் செய்து வருவது போல சிங்கள இளைஞர்கள் ஈழப்போராளி

www.tamilarangam.net



களுடனை போராட்டத்தை ஒரு தேசிய யுத்தமாக இப்போது கருதுவதில்லை. மாறாக ஈழமக்கள் முடுக்கிவிட்டிருக்கும் தேச விரோத லைக்கான யுத்தத்தை சிறீலங்காவில் ஏற்படப்போகும் புரட்சிக்கான திறவுகோலாகக் கருதுகிறார்கள். சர்வதேசமுதலாளித்துவத்தின் பக்கபலத்துடன் ஜெயவர்த்தன அரசு நிகழ்த்திவரும் இந்த யுத்தத்தில் அரசு நிட்சயம் தோல்வியடையும் என்று நம்புகிறார்கள். ஒரு துப்பாக்கியைக் கூட செய்யும்திறனற்ற ஜெயவர்த்தன அரசினால் நீண்டகாலம் இந்த யுத்தத்தில் நின்று பிடிக்க முடியாது எனக் கூறுகிறார்கள். தமது கருத்துக் களைக் பாமரச் சிங்கள மக்களிடம்விளக்கிக் கூறுகிறார்கள். . ஆனால், இத்தகைய முற்போக்குச் சக்திகள்கூட அடிக்கடி எம்மிடையே உள்ள பிற்போக்குச் சக்திகள் அப்பாவிச் சிங்கள மக்கள் மீது நடத்தும் இந்த மோசமான படுகொலைகளால் தளர்ச்சியடைகின்றன.

இத்தகையதொரு கட்டத்தில் ஈழமக்களாகிய நாம் சரியான திசையில் சிந்திக்க வேண்டும். ஈழப்போராட்டம் குறித்துஅகலமாகவும், ஆழமாகவும் சிந்திக்காமல் வெறும் ஒரு சில இராணுவ வெற்றிகளின் மூலம் எமது தேசத்தின் விடுதலையை வென்றுவிடலாம் என்ற கனவு இப்போது உடைந்துவிட்டதுஎமது எதிரியின் இராணுவ பலம் இப்போது புரிந்துள்ளது. இராணுவ பலமும், சர்வதேச பக்க பலமும் கொண்ட எமது பொது எதிரியை முறியடிக்க நாம் பல முனைகளிலும் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும். அது மாத்திரமல்ல முழு மனிதகுலத்தின் விடுதலையின் பாலும் அக்கறைகொண்டுள்ள நாம்...... எங்கோ இருக்கின்ற மக்களின் போராட்டங்கள் பற்றியெல்லலாம் எழுதிக் குவிக்கின்ற நாம்... நமக்கு அண்மையில்இருக்

www.tamilarangam.net



கும் சிங்களச் சகோதரர்களின் விடுதலையைப் பற்றிச் சிந்திப்போம். அவர்களோடு எமது கரங்களைப் பிணைப்போம் அதன் வழியிலே ஈழப்போராட்டத்தை வென்றெடுப்போம்.

---

# விடுதலைப் புலிகளின் (LTTE) அடாத செயல் உண்மைதான் என்ன ?

*தமிழ் நாட்டில் சமூக விரோதச் செயல்களில் ஈடு பட்டது போன்றே, ஈழத்திலும் ஈடுபடுவதாலேயே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) மீது ராணுவ நடவடிக்கை எடுக்கிறோம்.*

**—சென்னையில் விடுதலைப் புலிகள் அமைப்பு (LTTE) அறிவிப்பு**

*ஈழத் தமிழர் நலன்களுக்குப் பாதகமாக இந்திய அரசோடு சேர்ந்து கொண்டதாலேயே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) மீது தாக்குதல் தொடங்கியுள்ளோம்.*

**—இலங்கை வடக்கு, கிழக்கு மாநிலங்களில் விடுதலைப் புலிகள் (LTTE) பிரச்சாரம்.**

**ஈழ விடுதலைக்குப் போராடுவதாகக் கூறும் விடுதலைப் புலிகள் (LTTE), அதே லட்சியத்திற்காகப் போராடும் 'டெலோ'வை வேட்டையாடியதும் இப்போது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)யை வேட்டையாடுவதும் ''ஈழ விடுதலை''க்கு உதவுமா? சக போராளிகளை ஒழித்துக் கட்டுவது ஈழ லட்சியத்திற்கு எதிரானது. இதன் மூலம், ஜெயவர்த்தனே, அவர் பின்னால் மறைந்திருக்கும் அமெரிக்க உளவு நிறுவனம், சி.ஐ.ஏ. வரிசையில் விடுதலைப் புலிகள் அமைப்பும் சேர்ந்து விட்டதே!**

**கொழும்பு செல்லும் வழியில் சென்னை வந்த அமெரிக்க செனட் உறுப்பினர் சோலார்ஜை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் இருவர் 17-12-86ல் சென்னையில் சந்தித்துப் பேசியதின் மர்மம் என்ன?**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**
**சென்னை மாவட்டக் குழு.**

*நவஜோதி அச்சகம், சென்னை-2*

www.tamilarangam.net



# பின்னல்... திரும்பு!

மூலம்: வை. ஆர். குணதிலக    தமிழில்: இப்னு அஸுமத்

போயா தினத்துக் காலையில்
வெண்மை நிறத்து
ஆடைகளைப் போர்த்தியவாறு
'நெங்கல அருண' விஹாரையில்
'சில்' எடுத்தேன் —
என் அம்மாவுடன் நான்
சின்னப் பிராயத்தில்!

"ஒரு இலையானையேனும்
சாகடிக்க மாட்டேன்
உயிரினங்களைக் கொல்லல்
பாவம்" என்ற
அம்மா உனது வார்த்தைகள்
வெடிச் சப்தங்களின்
மத்தியில் இன்று
எதிரொலிக்கிறது!

"கெடம்பொல்லால்" விடுத்துக்
கொண்டைக்
குருவியைக் கொன்று
நான் —
நிலம் மீது வீழ்த்தியபோது...
என் முதுகுப் படலத்தில்
தழும்புகள் பிளக்க
அம்மா நீ
அடித்தது எனக்கு
ஞாபகம்!

இன்று —
இயந்திரத் துப்பாக்கியை
நீட்டியவாறு
யுத்த களத்தினைக் கும்பிட்டு
வாழ்வதற்காக நான்
மனிதர்களைக் கொல்லுகிறேன்...
அம்மா நீ
மௌனமாயிருக்கிறாய்!

மணல் பரப்பில்
பனை மரங்களினூடாக வரும்
சவால்கள் வளர்கின்றன
வாழ்வைத்
தியாகம் பண்ணும்
இளைஞர் கூட்டத்தினர் —
வெள்ளை மணலை
சிகப்பாக மாற்றுகின்றனர்.

நான் எப்படி
ஒரு இலட்சியத்தை நோக்குவது?
என்னிதயமே என்னைத்
திட்டுகிறது.
துப்பாக்கியின் வாயினூடாக
நான் காண்பது
எனது சகோதரர்களையே! ★

சிங்களக் கவிதையொன்று
தமிழில்

www.tamilarangam.net



# ஈழ, தமிழக, சிறீலங்கா செய்திகள்

## ஈழ தேசம் எங்கும் இரத்தக் காயம்
## எதிரியின் வெறியாட்டம் எல்லை கடக்கிறது.

சிறீலங்கா நவபாசிச அரசின் கூலிப்படைகள் ஈழதேசமெங்கும் தமது கோரத்தனமான வெறியாட்டங்களைக் கட்டவிழ்த்துள்ளன. ஈழப் போராட்டத்தை நசுக்கிவிடுவதையும் ஈழ மக்களை இராணுவ அடக்குமுறைக்குள்ளாக்கி ஒடுக்கி விடுவதையும் நோக்கமாகக் கொண்டு சிறீலங்கா கூலிப்படைகளால் விஸ்தரிக்கப்பட்டுள்ள இத்தாக்குதல்கள் தினந்தோறும் எண்ணற்ற அப்பாவி ஈழ மக்களின் உயிர்களைப் பலிவாங்கிவருகின்றது. கிழக்கில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் 200க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றும் இரத்தவெறி தணியாத விசேட கொமாண்டோ படை தொடர்ந்தும் சுற்றி வளைப்பு, தேடுதல் வேட்டை, பலியெடுப்பு, நூற்றுக் கணக்கானோர் கைது என வெறியாட்டம் ஆட வருகிறது. இப்பகுதிகளில் ஆண்களாக குறிப்பாக 14 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருப்பதே குற்றச் செயலாகக் கருதப்படுகிறது. தினமும் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்படுவதும் கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் காணாமல் போய்விடுவதும் வாடிக்கையாகிவிட்டது. இளம்பெண்கள் மானபங்கப்படுத்தப்படுவதும் அந்த அவமானம் தாங்காமல் அவர்கள் தற்கொலை செய்து கொள்வதும் இப் பகுதிகளில் நிகழும் அடுத்த பெரும் சோகமாகும். அரச படைகளின் அக்கிரமத்துக்குப் பயந்து தொழில்களுக்குப் போகமுடியாமல் பயிர்ச் செய்கைகளையும் கைவிட்டு இப்பகுதி மக்கள் பட்டினிச் சாவை எதிர் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

மட்டுநகர் நிலை இப்படியென்றால் திருமலையைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. திருமலைப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்தார்கள் என்பது பழைய வரலாறாகிக் கொண்டிருக்கிறது. திருமலை தான் ஈழத்தின் தலைநகர் என்ற கோசம் இருக்கிறது. ஆனால் திருமலை பறிபோய்விட்டது. உடமைகள், உறைவிடம் எல்லாவற்றையும் கைவிட்டு உயிர்களைக் காப்பாற்றுவதற்காக திருமலை மக்கள் அகதிகளாக முகாம்களில் அவர்களது நிலங்களோ இப்போது சிங்களக் காடையர்களின் கையில்.

வவுனியா, முல்லைத் தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் கூலிப்படைகள் பாரிய அளவில் தமது குரூர வேட்டைகளைத் தொடர்கின்றன. பல முனைகளிலும் நிகழ்த்தப்படும் இத்தாக்குதல்களில் எண்ணற்ற அப்பாவி மக்கள் தொடர்ந்து பலியாகிவருவதுடன் வவுனியாப் பகுதியில் நூற்றுக்கணக்கானோர் சிறீலங்கா வதைமுகாம்களுக்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர்.

இந்தப் பிரதேசங்களின் நிலை இப்படியிருக்கையிலே விடுதலை செய்யப்பட்ட பிரதேசம் என்று வெட்டி முழங்கப்பட்ட யாழ். குடாநாட்டின் நிலை மேலும் மோசமடைந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலைப் புலிகள் ஏனைய இயக்கங்கள் மீது நடத்திய அழித்தொழிப்பு முயற்சிகளைச் சாதகமாகப் பாவித்து ஏராளமான கூலிப்படைகள் இப்போது யாழ்.குடாநாட்டினுள் குவிக்கப்பட்டுள்ளதுடன் பல புதிய இராணுவ முகாம்களும் திறக்கப்பட்டு வருகின்றன. தெல்லிப்பளை, கட்டுவன், அளவெட்டி, நல்லூர், வசாவிளான், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் விமானக் குண்டு வீச்சு நடவடிக்கைகள் தொடர்கின்றன. நாளப் பற ந்து நிகழ்த்தப்படும் இத்தாக்குதல்களால் பள்ளிச் சிறுவர்கள், முதியவர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டும் படுகாயமடைந்தும் வருகிறார்கள். பாடசாலைகள், வைத்தியசாலை, ஆலயங்கள் ஆகியன சேதப்படுத்தப்பட்டதுடன் வீடுகளும் நாசமாகி வருகின்றன. மக்கள் பல பகுதிகளில் பாதுகாப்பைத்தேடி இடம் பெயர்கின்றனர். இந்தத் துன்பங்களால் தவிக்கும் மக்களை கூலிப்படைகளின் 'செல்' தாக்குதல்கள் மரணவலிக்கு உள்ளாக்குகின்றன. சமீபத்தில் கோட்டையிலிருந்து நிகழ்த்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 35க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இதில் யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர்களும் பணிபுரிந்த தாதிகளும், இஸ்லாமிய மக்களும் அடங்குவர்.

எதிரியின் இராணுவ மிலேச்சத்தனத்தால் துன்புறும் குடா நாட்டு மக்களை பொருளாதாரத் தடை மேலும் துன்பமடையச் செய்கிறது. தலை தூக்க முடியாத துன்பத்தின் மத்தியிலே சிக்கித் தவிக்கும் எம் மக்களின் நிலையை எடுத்துச் சொல்ல வார்த்தைகளே இல்லை.

## ஈழப் போராட்டத்தில் முதுகில் குத்தும் சதிகள் தொடர்கின்றன.

எல்லையில்லாத துன்பங்களின் மத்தியிலே எம்மக்கள் ஒரு புறமாய் தவிக்க... மறு புறத்தில் சிறீலங்கா இனவாத அரசு இராணுவ வெற்றிகளைக் குவிக்க.... இடையிலே எதிரியோடு சமரசம் பேச முனைகின்ற பிற்போக்குச் சக்திகளின் சுயமைத்தனம் நிறைந்த துரோகங்கள் தொடர்கின்றன. திருமலை வேண்டாம், அம்பாறையும் வேண்டாம், வடக்கும் மட்டக்களப்பில் சிறுபகுதியும் அத்தோடு தலைவருக்கு முதலமைச்சர் பதவியும் போதும் என்ற அடிப்படையில் சிறீலங்கா இனவாத அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இரகசியப் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. இதனை படுகொலையாளன் அத்துலத் முதலியும் தெரிவித்துள்ளான். விடுதலைப் புலிகளுடன் பல்வேறு வழிகளில் தாம் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்துவருவதாக இந்த உறவுக்கு சமீப கால முகவராக 'இந்து' பத்திரிகை ஆசிரியர் செயல்பட்டிருந்தார்.

## இனவாத அரசு பொருளாதாரப் புதைகுழியில் நிதியமைச்சர் புலம்பல்

மீளமுடியாத பொருளாதாரப் புதை குழியில் சிறீலங்கா அரசு தள்ளப்பட்டுள்ளதாக சிறீலங்காவின் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். பெருமளவு பணம் பாதுகாப்பு(?) செலவீட்டுக்குப் போய்விடுவதால் ஒரு புறமும், உள்நாட்டு உற்பத்தி குறிப்பாக நெல் 30% ஆலும், மீன் 50%ஆலும் குறைந்துள்ளமை, வெளிநாட்டுக் கடன்கள் 50%. அல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறைந்துள்ளமை, வெளிநாட்டு முதலீடுகள் உயர்ந்து போனமை, எல்லாசப் பிரயாணி கள் இலங்கை இருக்கும் திசையிலே தலைவைத்துப் படுக்காமல் போனமை ஆகியவை பொருளாதாரத்தில் பெரும் பாதக நிலையை ஏற்படுத்தியுள்ளது என அவர் தெரிவித் துள்ளார். அதே சமயம் இந்தப் பிரச்சனைகளுக்கான அடிப்படைக்காரணம் நாட்டின் இனப்பிரச்சனையே என்றும் இனப் பிரச்சனை தீராதவரை இந்தப் பொருளாதாரச், சிக்கல்கள் தீரப்போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

<u>புலிகளின் வேட்டை தொடர்கிறது</u>.

ஈழத்தின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தினருக்கு தாம் எந்த வகையிலும் குறைந்தவர்களல்ல என்பதை வேட்டைநாய்களாய் வலம் வரும் புலிகள் நிரூபித்து வரு கின்றனர். யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தோழர்களைதேடித் தாக்கி வரும் புலிகள் சமீபத்தில் மட்டுநகரில் ஈ.பி.ஆர்.எல்.எவ் முகாமைச் சுற்றி வளைத்து நிகழ்த்திய தாக்குதல் ஒன்று ஈ.பி.ஆ.ர.எல்.எவ் இன் மக்கள் விடுதலைப் படையால் முறியடிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் 15 புலிகளும் மக்கள் விடுதலைப் - போராளிகள் 5வரும் பலியாகினர்.

அதேசமயம் தைகைதடியில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தொன்றில் விடுதலைப் புலி இய க்கத்தைச் சேர்ந்த 16 பேரும் பலியாகியுள்ளனர். இவர்களின் 6பேர் இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களாகும். இச்சம்பவத்தில் 50க்கும் மேற்பட்ட பொது மக்க- ளும் கொல்லப்பட்டனர்.

*********************************************

## உணர்வுகள் பொங்கட்டும்

இனிய தோழனே!
புத்தம் புதுப் பானையிலே
புத்தரிசி போட்டு
கரும்பும், கவின் சுவையும் சேர்த்து
விருப்பமாய்ப் பொங்கவிட்டோம்.
வாழைகளும், தோரணமும்
மஞ்சளும், குங்குமமும்
மங்கலமாய் — பொலிவோடு
சுற்றங்கள் சூழ்ந்துவர
முற்றத்தில் பொங்கவிட்டோம் அன்று.
விடுதலைப் பயிரை
வேலியே மேய்ந்து கொண்டிருப்பதால்
வாழைகளும், தோரணமும்
மஞ்சளும், குங்குமமும்
வழக் கொழிந்து போயின

பஞ்சமும், பசியும்
பாசிச வெறியும்
துரோகத் தனங்களும்
ஏவுகணைகளாக
இதயங்களைத் தாக்கும் போது
வேதனையும் - வெறுமையும்
மட்டுமே பொங்குகின்றன இன்று.
உணர்ச்சிகளும் பொங்குகின்றதா?
வேண்டாம் தோழனே!
உன் -
உணர்வுகள் மட்டும் பொங்கட்டும்
அந்த ஒளியில்,
உன் பயணம் தொடரட்டும்.

— பிரபஞ்சன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழம் ஈழ புத்திரா — களமும் தளமும்

போராளிகளும், பொதுமக்களும் பெருந்தொகையாக இறந்து கொண்டிருக்கும் விபரீதப் போக்கு எவருக்கும் மகிழ்ச்சியைத் தரத்தக்கதொன்றல்ல. ஆனால், இன்றைய களமும், தளமும் பற்றிய பார்வையில் முதன்மைப்படுத்த வேண்டிய ஒரு அம்சமாக- அது அமைகின்றது.

எமது களம் ஈழம். இது அடிப்படைக்களமும் கூட. இங்கேதான் எமது மக்கள் வாழ்கின்றனர். இவர்களது மீட்சிக்காகத் தான் இயக்கங்கள் ஆயுதங்களைத் தூக்கின. போராடுகின்றன. முனைப் பெடுத்துக்கொண்டுவந்த போராட்டம் தற்போது ஒரு திணறல் நிலைக்குள் நுழைந்துள்ளது. எமது பார்வையில் எங்கள் ஒவ்-வொரு பிரதேசமும் சுடுகாடாகிக் கொண்டு வருகின்றது என்ப தை அவதானிக்கலாம்.

இத்தகைய ஒரு காலகட்டத்தில் எமது தளம் எது? என்ற ஆய் வுக்குள் செல்ல வேண்டியிருக்கின்றது. எது எமது தளம்? இது பலவிதமான குழப்பங்களைக் கொண்ட ஒன்றாகும். இயக்கங்களி லில் பலவற்றிற்கும் பொதுமக்களில் 100 க்குத் 90 வீதமா-னோருக்கும் இன்றுவரை இதில் சரியான தெளிவு இல்லை. இது ஒரு அடிப்படை உண்மை.

குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு முன், போராட்டம் கூர்மையடை-ந்து வந்தபோது அடக்குமுறையின் மொத்தக் குத்தகையாளர் களான சிறிலங்கா அரசின் கூலிப்படையினர் தமது முகாம்களுக் குள்ளேயே ஒழிந்து கிடந்தனர். இன்று இந்த நிலைமாறிவிட்டது. கூலிப்படைகள் தமது [illegible] விட்டு வெளியேறி தம் அட்ட காசத்திற்கும், கொடுமைகளுக்கும், புதிய உயிர்ப்பைக் கொ டுத்துள்ளன. பலம் மிக்கவர்கள் என்ற சர்வதேச மதிப்பிற்கு-

www.tamilarangam.net



ரிய எமது போராளிகள் பலர் இராணுவத்தினால் கொல்லப் பட்டுள்ளனர். அத்துடன் தங்களுக்குள்ளேயே பிணக்குகளை உரு வாக்கி போர் முகாம்களைப் பிணக்காடாக்கியுள்ளனர். வட் டுக்கோட்டை, மாதகல், தெல்லிப்பழை, உரும்பிராய், புத் தூர், சாவகச்சேரி ஆகிய இடங்களில்புதிய இராணுவமுகாம் களை அமைக்கும் முயற்சியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. அப் பாவிப் பொதுமக்களின் உயிர்கள் மிகவும் சாதாரணமாகப், பறிக்கப்படுகின்றன. 1986ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை15, 417 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனப் பிரஜைகள் குழு கணக்கெடுத்திருக்கின்றது. பொது மக்களின் மரணங்களிற்கெல விசேட விசாரணைகள் வைத்த காலம் போய்விட்டது. காரணம், போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதற்கான போர்த் தந்திரங்களிலொன்றாக பொதுமக்களைக் கொல்லுதல் என்ற கொடூரத்தைக் கூலிப்படைகள் கையாண்டு வருகின்றன. இந்த விபரீதத்தைத் தடுக்க இந்தியா தனது படைகளை அனுப்பப்-போகின்றது என்று யாராவது நினைப்பார்களாயின் அது ஒரு அழகிய கனவாகத் தான் இருக்கும். சிறிலங்கா அரச கூலிப் படைகள் அண்மையில் தமிழ் பேசும் மக்கள் மீது காட்டிய கொலைத்தாண்டவ விடயத்தில் இந்தியாவின் போக்கினை "இந்து" பத்திரிகை தனது ஆசிரியத் தலையங்கம் ஒன்றில்வன் மையாகச் சாடியுள்ளது.

களம், ரணகளமாகி கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எமது அணுகுமுறைகள் எப்படியிருக்க வேண்டும்? எந்த "போர்முலா" வை சிறிலங்கா கூலிப்படைகள் தமிழ் பேசும் மக்கள் விடயத்தில் கடைப்பிடிக்கின்றதோ அதனை நாமும் அவர்கள்விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டும். இங்கே, எங்க

www.tamilarangam.net


ளது இலக்கு கூலிப்படைகளேயொழிய சிங்களம் பேசும் மக்கள் அல்லர்.

களத்தின் நிலையிலேற்பட்ட சிதைவிற்கு சிறிலங்கா அரசுபொருளாதார ரீதியாக மேற்கொண்ட மனிதாபிமானமற்ற அடக்குமுறை உதவியிருக்கின்றது. மக்களைப் பட்டினி போடுவதன்மூலம் போராட்டத்தை மழுங்கடிக்கலாம் என அது கருதுகின்றது.

களத்திலே இன்று இயக்கங்களும் மக்களும் துன்பங்களை அநுபவிக்கின்றார்கள் என்றால் அதற்குரிய அடிப்படைக் காரணம் அவர்களின் தளங்களுக்கிடையிலே முரண்பாடுகள் இருக்கின்றன என்றே அர்த்தமாகும். ஈழம் என்பது ஒரு தளம் அல்ல. அது ஒரு இலக்கு. அந்த இலக்கினையடைய ஒவ்வொரு இயக்கமும் தேர்ந்தெடுத்துக் கொண்ட தளங்கள் வித்தியாசமானவை. தடுமாறும் தளங்களும் உள்ளன. சில இயக்கங்களோ தங்கள் தளம் எதுவென்றே தெரியாமல் இருக்கின்றன. தளம் பற்றிய தெளிவின்மை போராட்டத்தை நகர்த்த முட்டுக்கட்டையைப் போடுவதுடன் எதிரிப்படைகளிற்கு பல வசதிகளையும் செய்து கொடுக்கின்றது. ஒவ்வொரு இயக்கமும் சரியான தளம் எது என்பதை மக்கள் முன் வைக்க வேண்டும். நாம் மதிப்பிடுவது போல இது நடக்கும் என நினைக்க முடியாது. எனவே எமக்கு வேண்டிய தளத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு மக்களைச் சார்கின்றது. சரியான தளத்தைக் கொண்டுள்ள இயக்கத்தைத் தெரிவு செய்தால் போராட்டம் சுலபமாகும். பிழையானதாயின் ஈழம் கிடைத்த பின்னரும் கூட நெருக்கடிகளும் அழிவுகளும் தொடரும்.

www.tamilarangam.net



எமது தளத்தில் மாற்றம் ஏற்படவேண்டும். ஏற்கனவே, நாங்கள் கொண்டிருந்த தளம் பிற்போக்கு வர்க்கத்தின் நலன்க-ளைமட்டுமே பிரதிபலித்தவண்ணமிருந்தது. அடிப்படை மனிதஉரிமைகளை என்றைக்குமே சரியாகக் கருத்திற்கொள்ளாமல் குட்டி முதலாளிகளை மட்டுமே பெருக்கிக் கொண்டிருந்தது.. அனைத்து மக்களுக்கும் பயன்படக்கூடிய பொருளாதாரக் கொள்கையொன்று கடைப்பிடிக்கப்படவில்லை. பெண்ணினத்தின் உரிமைகளிற்குச் சங்கிலி போடப்பட்டிருந்தது. இனவாதத்திற்-கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்தத் தளத்தை மாற்றவேண்டிய அவசியமிருந்தும் இம்மாற்றம் பற்றிய பிரக்ஞை இல்லாமல் எமது போராட்டம் தொடங்கியது.

எனினும் காலத்தின் ஓட்டம் பெரும் நட்டம் எதனையும் கொ-ண்டுவந்து விடவில்லை. ஏனெனில், இன்று இந்தத் தளத்தின் மீது பாரிய விரிசல் ஏற்பட்டுவிட்டது. விரிசல் மாற்றம் அல்-ல. மாற்றங்களைப் பற்றிய பிரக்ஞை இல்லாமல் தளம்சித றுண்டுவிடுகின்றது. நெருக்கடிகளிற்கு மத்தியிலும் பிற்போக்கு வர்க்கத்தின் நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. இதனால்தான் களம் கூலிப்படைகளினதும் எதிர்ப் புரட்சிச் சக்திகளினதும்கையில் சிக்கிச் சிதறுண்டு கொண்டிருக்கின்றது.

ஆனால், இன்று ஏற்பட்டுள்ள விரிசலைப் பயன்படுத்தி ஒருபுதிய மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. அதற்குத் தேவையானது முற்போக்கு இயக்கங்களுக்கிடை-யேயான கொள்கைரீதியான கூட்டும், கடும் உழைப்புமாகும்.

பழைய தளத்தை முழுமையாக ஒதுக்கிவிட்டு ஒரு புதியதள-த்தை நாம் கட்ட வேண்டும். கட்டப்படும் தளம் சமத்துவ தளமாக இருக்கவேண்டுமானால், மக்களிடையே முற்போக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியல் வேலைகளை மிக மிகத் தீவிரமாக முடுக்கிவிடவேண்டும். இன்றைய இயக்க முரண்பாடுகள் எமக்குக் காட்டும் உண்மைகள் பல. சிறிலங்கா கூலிப்படைகளிற்கு தெம்பையும் போராட்டத்திற்கு முட்டுக்கட்டையினையும் போட்டுவரும் இந்த முரண்பாடுகள் முதலில் ஒழிக்கப்பட வேண்டும்.

ஒரு புரட்சிகரமான தளம் தான் எமக்கு வேண்டும் என்று சொல்வதற்குப்பல நியாயங்கள் உள்ளன. ஏனெனில், சர்வதேச ஏகாதிபத்தியம் தனக்கான களங்களை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தேடிக் கொண்டிருக்கின்றது. ஏகாதிபத்தியத்துக்கு ஈழத்தில் களம் இடம் கிடைக்குமாயின் அங்கு மீண்டும் அடக்குமுறையின் வீச்சு உச்சம்பெறும். இந்த உண்மைகளைக்கருத்தில் எடுக்கும்போது, ஒரு அடிப்படைமாற்றத்துக்கான அவசியத்தை உணரமுடியும், இதன்பின், எந்தத் தளத்தில் நின்று அந்த மாற்றத்தைக் கொண்டுவந்தால் அடக்குமுறையிலிருந்து எமது மக்கள் விமோசனம் பெறுவர் என்பதில் எவருக்கும் குழப்பம் ஏற்படாது.

---

அன்பார்ந்த மக்களே, தோழர்களே!

நெருக்கடி மிக்க இன்றைய கால — கட்டத்தை உடைத்து ஈழப்போராட்டத்தை வென்றெடுக்க ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கரங்களைப் பலப்படுத்துங்கள். உங்கள் அனைத்துத் தொடர்புகளுக்கும்..

EPRLF (FRANCE BRANCH)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.
தொலைபேசி: 48-74-98-30.

www.tamilarangam.net



# சுயநலத்தைவிட்டுவிடு என்னருமை யாழ்ப்பாணமே

மூன்று கடல் சூழும்
மூன்று தமிழ் வாழும்
என்னருமை யாழ்ப்பாணம்.
நிற்சாமமும், குருநகரும்
கொடிகாமத்தின் நெடிய வீதிகளும்
சாதிப் பேயடித்து
இரத்த வாந்தியெடுத்தது
அந் நாளில்

இன்று
ஒத்திவைக்கப்பட்டுள்ள
சாதிப் பிளவுகள்
நல்ல சகுனம் கேட்குது
மீண்டும் ஒரு முறை ஆள்வதற்கு
என்னருமை யாழ்ப்பாணமே

தரப்படுத்தல்
சிங்களத்து அரசும்
மனமிரங்கும்
மன்னார், வன்னியென
யாழ்ப்பாணமே
அங்கு பரீட்சை எழுதும்
யாழ்ப்பாணமே

www.tamilarangam.net


தொழில் நுட்ப காலம் நகர்ந்து
மின் - அணு - பௌதீகக் காலம்
உலகை வெல்லும்
நாமோ -
கிடுகு வேலிக்குப் போட்ட கிழுவை
உனக்கோ எனக்கோ?
யுகக் கணக்கில்
காலத்தைக் கொல்வோம்
என்னருமை யாழ்ப்பாணமே

செல்வம்
(மண்ணில் தெரியுது வானம்)

ஆம் இன்று ஈழப் போராட்டத்திலும் இந்த யாழ்ப்பாணக் குறும்சம் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப் பாணக் குறும்சத்தை வெகுசாதுரியமாகவே தமக்குச்சாத கமாகப் பயன்படுத்தும் பிற்போக்குச் சக்திகள் திருமலை யையும், மட்டக்களப்பையும், அம்பாறையையும், மலையகத்தையும் ஏன் வன்னியையும் கூட காற்றில் பறக்கவிட்டு யாழ். குடாநாட்டுக்குள் ஒரு புதிய மாயையைசிருஸ்டிக்க ஆரம்பித்துள்ளன. ஆனல், இந்தத் துரோகத்தை ஈழமக்கள் புரியாமலில்லை. இதோ ஈழத்திலிருந்து அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கும் ஒரு கடிதம்......

".... மட்டக்களப்புத்தான் உண்மையில் பிரச்சனைக்குரியஇடம். அங்கு இரண்டு மைலுக்கு ஒரு ஆர்மிகாம்ப். அது உண்மையிலேயே ஒரு கொலைக் களம். சமீபத்தில்200

www.tamilarangam.net



பேரைக் கொக்கட்டிச்சோலையில் கொன்ருர்கள். யாழ்ப் பாணத்தான் பிரச்சனைகளை உருவாக்கிவிட்டு அகதிகளாக வெளிநாட்டுக்குப் போய் காசு பண்ணிக் கொண்டிருக்க மட் டக்களப்பும், திருகோணமலையும் எமக்காக அழிந்துகொண் டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் எரிபொருள்தடையைஎதிர்த்து உலகத்திற்கு எல்லோரும் குரல் கொடுக்கிருர்கள். மட்டுந கர், திருமலை அழிவைப் பற்றி யாழ்ப்பாணத்தில் செய் திகளை அறிவதோடுசரி. எது எதற்கெல்லாம் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்துகிருர்கள். மட்டக்களப்புக் கொலைகளைப் பற்றி யாழ்ப்பாணம் கவலைப்படவே இல்லையே. யாழ்ப் பாணத்தானை நினைக்க வெறுப்பாக இருக்கிறது. எமதுவீட் டுக்கு சற்றுத் தள்ளி இரண்டு அகதிகள் முகாம்கள்உண்டுஇரண் டிலும் திருக்கோணமலை அகதிகள். சிறுவர்கள் அழுக்குத்துண் டுடன் விளையாடிக் கொண்டிருக்க பெண்கள் முற்றங்களில் ச மைத்துக் கொண்டிருக்கிருர்கள். எல்லோரும் பிச்சைக்கா-ரர்கள் மாதிரி. ஆனல், முன்பு இவர்கள் பிச்சைக்காரர்-களா? விவசாயிகள் இவர்களுக்கு தரப்படுத்தல் அல்லது -மொழிச் சட்ட மூலம் பிரச்சனையாக இருந்ததா? எமது தேவைகளை நிரப்ப மட்டுநகர், திருமலையைப் பலிகொடு க்கிறேம். சொல்லப்போனல் யாழ்ப்பாணம் எதைஇழந்தது இதையெல்லாம் இப்போ வெளியே கதைக்க முடியாதுஎமது விலங்குகளை நாமே தயாரித்து நாமே பூட்டிக் கொண் டோம்.......

இந்தக் கடிதத்தை எழுதிய உள்ளம், ஈழவிடுதலையைநேசிக் கும், பரஸ்பரம் மனிதன் மீது அன்பு செலுத்தும் உள்ளம்எவ் வளவு தூரம் வெந்து சலித்து இந்தக் கடிதத்தை எழுதியிருக் கு

www.tamilarangam.net



கும். ஆனால் இந்த வேதனை நியாயமானதே பிரதேசவேறு பாடுகளைத் தூண்டுவதற்காக இந்தக் கசப்பானஉண்மைகளை நாம் பகிரங்கப்படுத்தவில்லை. மாறாக போராட்டத்தை, வென்றெடுக்கமுடியாமல் இருப்பதற்கான எமது பலவீனங்-களை நாம் பகிரங்க விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டும் அதன் மூலம் மாத்திரம் தான் எம்மால் சரியான திசைவழி யிலே போராட்டத்தை இட்டுச் செல்ல முடியும்.

இல்லையேல் எமது அருமை யாழ்ப்பாணமும்...இன்றுயாழ்ப் பாணத்தை ஆளுமை செய்யும் அமைப்பும் எம்மை எங்கேஇட் டுச் செல்லும் தெரியுமா...? இப்போது பாருங்கள் ஈழ மக்களே திருமலையில் கம்பீரமாய் தலை நிமிர்ந்து பெரும் பான்மையாய் வாழ்ந்த தமிழ் பேசும் மக்கள் இன்று ஒரு சிறுகிராமத்தில் கூட வாழமுடியாமல் அகதிகளாய் அகதிகள் முகாம்களில் புழுக்களாய் நெளியும் நிலை... மட்டக்களப் பில் சந்திக்கொரு இராணுவ முகாம்களில் வதைபடும்நிலை .... மலையக்த்தில் ஏற்கனவே வாழ்க்கையின் துன்பங்-கள் போதாதென்று இன்று இந்த புதிய அடக்குமுறையில்சிக் குண்ட நிலை ஏன் ஏற்பட்டது. இத்தனை நடந்த பின்பும் .... திருமலையிலும், மட்டக்களப்பிலும் அரசியல் வேலை செய்த.... மலையகத்தைப் பற்றி யோசித்த... மலை யகத்தையும் போராட்டத்தில் இணைந்த இயக்கங்களை அடித்து விரட்டி விட்டு யாழ்ப்பாணத்தை மட்டும் ஆளநினைப் பவர்களுக்கு ஆதரவு கொடுப்பது சரியா.....?.

"திருமலை உங்களுக்கே.அம்பாறை அதுவும் உங்களுக்கே. மலையகம்- அதைப் பற்றி நாங்கள் கதைக்கவில்லையே. மட்டக்களப்பில் ஒரு பகுதியையும் வடக்கையும் இணையுங்-கள் அதைவைத்துக் கொண்டு வடக்குக் கிழக்கு இணைப்புசரி

www.tamilarangam.net



என்று நாங்கள் எங்கடை சனங்களைப் பேய்க்காட்டலாம்" என்று எதிரியோடு சமரசத்துக்குப் போபவர்களைப்பற்றிச் சிந்தியுங்கள் மக்களே. - இது ஒரு தேசத்தின் விடுதலைப் - போராட்டம் என்பதையும் ... திருமலையிலும், மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் ஏன் மலையகத்திலும் பட்ட.... படுகின்ற இரத்தக் காயம் ஈழத்தின் விடுதலைக்காகவே ஒழிய யாழ்ப்பாணத்தின் நிழல் விடுதலைக்காக அல்லஎன்பதை சிந்தியுங்கள் எம்மக்களே.

இத்தனை கால இழப்புக்களும், கண்ணீரும். இரத்தமும் ஒரு சிலருக்கு அதிகார அந்தஸ்தையோ அல்லது உல்லாச சுக போக வாழ்க்கையையோ அளிப்பதற்கு அல்ல அனைத்து ஈழ மக்களும் சுதந்திரமாக வாழ்வதற்கே என்பதை உணர்ந்து சுய நலத்தை விட்டுவிடு என்னருமையாழ்ப்பாணமே.

[redacted]

தோழர்களே, நண்பர்களே!

ஈழப்போராட்டத்தை சரியான திசைவழியினூடாக வென்றெடுக்கும் வரலாற்றுக் கடமையில் தனது பங்களிப்பை ஆற்றி வரும் 'தமிழ் முரசை' ஆதரியுங்கள். ஊக்கப்படுத்துங்கள். வளர்த்தெடுங்கள். உங்கள் அனைத்துத் தொடர்புகட்கும்-- .

THE EDITOR
'TAMIL MURASU'
EPIC
10, RUE DES MARTYRS
75009-PARIS.

www.tamilarangam.net


# கருகும் கன்னிப்பூக்கள்

இந்தக் கன்னிப்பூக்கள்
ஏன் வாடிக்கிடக்கின்றன?
நீளக் கூந்தல்.
நீள விழிகள்..
இடுப்பைத் தடவிடும்
ஈரப் புடவைகள்...
வசந்த மதர்ப்பினை
மறைக்காத உடல்களில்—
என் கண்கள்
வாட்டத்தைக் கண்டன.

ஓ!
கன்னிப்பூக்களே!
உங்களைக் காணும்போது
என் கண்கள் கலங்குகின்றன.
உங்களுக்கு முன்னால்
சம்பிரதாயத் தூசிச்சங்கிலிகள்.
உங்களுக்கான பேரங்கள்
இன்னமும் ஓய்ந்து விடவில்லை.
தலைமுறைகளின் பேரால்
உங்களுக்கு விலைகள் பேசும்
இன்றைய "இளம் கிழவர்களை"
நான் சபிக்கின்றேன்

உங்கள் அப்பாக்களின் மீது
சுமத்தப்பட்ட வட்டிக்கணக்குகளை
அந்தகஇரவுகளில் நீங்கள்
எண்ணிக்கொண்டிருக்கும்போது
உடற்தகிப்பின் சுகங்கள்
உங்களுக்கு அந்நியமாகிவிடுகின்றன.
தாலிகள் உங்கள் கழுத்தைச்
சுற்றிக் கொண்டிருந்தாலும்—
கன்னிப் பூக்களாக நீங்கள்
கருகிக் கொண்டிருக்கும் ரகசியத்தை
உங்கள் விழிகள் சொல்லுகின்றன.

இந்தக் கன்னிப்பூக்களுக்காக
ஒரு புதியவிதியை எழுதப் போகும்
அணியின் சுவட்டை
நான் தேடுகின்றேன்.

— தமிழ்